DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 4 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 2** |
| **Name** | **:** | சுந்தரம் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>29.10.2025</u>**

**முதல் விசாரணை:**

நான் கப்பத்துரை கக்கஞ்சி காலணியில் குடியிருக்கிறேன், நான் கூலி வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி பாத்திமா, 2ஆம் எதிரி சாகுல்அமீது மற்றும் 3ஆம் எதிரி உமர் என்ற முகமது உமரை எனக்கு தெரியாது. அ.சா.1 முருகனை தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது, அ.சா.1 முருகனுக்கும், எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அனுமதி அளித்தது, அதன்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், நான் போலிசார் விசாரணையில் 10.4.2022ஆம் தேதி காலை 7.30 மணிக்கு வேலைக்கு போய்கொண்டு இருந்தபோது கப்பத்துரையில் உள்ள 1ஆம் எதிரி பாத்திமாவின் கடைக்கு முன்பு என் பகுதியை சேர்ந்த கிட்டான் என்பவர் எச்சில் துப்பிவிட்டதாக கூறி 1ஆம் எதிரி பாத்திமா சத்தம் போட்டுகொண்டிருந்தார் என்றும், அப்போது நான் அருகில் இருந்தேன் என்றும், அப்போது 1ஆம் எதிரி பாத்திமா கிட்டாவை பார்த்து ஏண்டா சக்கிலி தாயோளி கடைக்கு அருகில் தான் எச்சில் துப்புவாயா என்று தகறாறு செய்து அவரை கையால் அடித்துவிட்டார் என்றும், அப்போது அதை பார்த்த அங்கு துப்புறவு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அ.சா.1 முருகன் 1ஆம் எதிரி பாத்திமாவிடம் ஏன் என் மாமாவை ஜாதி பெயரை சொல்லி திட்டி அடித்தீர்கள் என்று கேட்டதாகவும், அப்போது 1ஆம் எதிரியின் மகன் 3ஆம் எதிரி உமரும், 1ஆம் எதிரியின் கணவர் 2ஆம் எதிரி சாகுலும் அங்கு வந்து அ.சா.1 முருகனை பார்த்து ஏண்டா சக்கிலி நாயே நீ என்ன எங்களை கேள்வி கேட்பதற்கு என்று அ.சா.1 முருகனை தாக்க வந்தனர் என்றும், அப்போது அ.சா.1 முருகன் அந்த கடைக்கு முன்பு இருந்த பிளாஸ்டிக் பைப்பை எடுத்தார், இதை பார்த்த 3ஆம் எதிரி உமர் கடைக்குள் சென்று இரும்பு

பைப்பை எடுத்துவந்து அ.சா.1 முருகனின் இடது பக்க தலையில் அடித்தார் அதனால் அ.சா.1 முருகனுக்கு இடது பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும், இதை பார்த்தவுடன் 1ஆம் எதிரி பாத்திமாவும், 2ஆம் எதிரி சாகுலும் கடைக்குள் சென்றுவிட்டார்கள் என்றும், நானும் கிட்டானும் அங்கிருந்தவர்களும் 108 ஆம்புலன்சில் அ.சா.1 முருகனை சிகிச்சைக்காக ஊட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு அ.சா.1 முருகன் உள்நோயாளியாக சிகிச்சை எடுப்பதாகவும் சொல்லிவிட்டு தற்போது நான் எதிரிகளோடு சமாதானமாக போனதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**1,2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.10.29 17:30:24 +0530